නැෂනල් පේපර් කොම්පැනි ලිමිටඩ්

நேஷனல் பேப்பர் கம்பெனி லிமிடட்

National Paper Company Limited



NPCL

වාර්ෂික වාර්තාව

ஆண்டு அறிக்கைகள்

Annual Report

2013 - 2014

කර්මාන්ත අමාත්‍යාංශය

தொழில்துறை அமைச்சகம்

Ministry of Industries



වාර්ෂික වාර්තා, ගිණුම් ප්‍රකාශණ සහ ස්වාධීන විගණන වාර්තා

නැෂනල් පේපර් කොම්පැනි ලිමිටඩ්

වාර්ෂික වාර්තාව

2014.03.31 දිනෙන් අවසන් වන වසර සඳහා

INDEX

අන්තර්ගතය	පිටු අංක
1. සභාපතිතුමාගේ පණිවුඩය	01
2. වර්තමාන අධ්‍යක්ෂක මණ්ඩලය 2022	03
3. දැක්ම සහ මෙහෙවර	05
4. 2014.03.31 දිනෙන් අවසන් වසර සඳහා මූල්‍ය ප්‍රකාශන	
4.1 සංස්ථාපිත තොරතුරු	09
4.2 අධ්‍යක්ෂවරුන්ගේ වාර්ථාව	10
4.3 විගණකවරුන්ගේ වාර්ථාව සහ මූල්‍ය ප්‍රකාශන	11

உள்ளடக்கம்	பக்க இல.
1. தலைவரின் செய்தி	01
2. பணிப்பாளர் குழாத்தினர் 2022	03
3. இலக்கு மற்றும் நோக்கக் கூற்று	05
4. 2014 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் பொருளடக்கம்	
4.1 கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்	09
4.2 பணிப்பாளர்களின் அறிக்கை	10
4.3 கணக்காய்வாளர்களின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்	11

Contents	Page No.
1. Message from the Chairman	01
2. Incumbent Board of Directors 2022	03
3. Vision & Mission	05
4. Financial Statements for the Year Ended 31 March 2014	
4.1 Corporate information	09
4.2 Report from the Directors	10
4.3 Auditors' Report and Financial Statements	11

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடட்

ஆண்டறிக்கைகள்

2013 – 2014

தொழிற்துறை அமைச்சு

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடட்

ஆண்டறிக்கைகள்

2014.03.31 உடன் முடிவடையும் வருடத்துக்கானது



தலைவரின் செய்தி

வரையறுக்கப்பட்ட இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனம் என்னும் பெயரில் இலங்கையில் கடதாசிக் கைத்தொழிலின் முன்னோடி எனப் பெயர் பெற்று 1956 முதல் இன்று வரை 7 தசாப்தங்களாக இலங்கையின் கடதாசித் தேவையை பூர்த்திசெய்து மிகப்பெரிய சேவையினை வழங்கிய இந்நிறுவனம் 1992 ஆம் ஆண்டு ஓர் அரச நிறுவமாகப் பதிவுசெய்யப்பட்டதோடு 1995, 1996 ஆம் ஆண்டுகளில் தேசிய உற்பத்தித்திறன் விருதினையும் சொந்தமாக்கிக்கொண்ட ஒரு நிறுவனமாகும்.

நான் உட்பட என்னுடைய முகாமைத்துவக் குழுவினர் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்நிறுவனத்தின் நிர்வாகிகளாக நியமிக்கப்படும்போது வாழைச்சேனை மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய இரு தொழிற்சாலைகளும் செயலிழந்து காணப்பட்டதோடு, 2016 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சுயேச்சை ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சிலரைத் தவிர அநேகமான ஊழியர்கள் ஓய்வூபெற்றனர். இவ்வாறு கடதாசிக் கைத்தொழில் பின்னடைவுற்றிருந்த காலப்பகுதியில் கடதாசிக் கைத்தெழிலை சுய நிதியிடல் திட்டத்தின் கீழ் மீண்டும் ஸ்தாபிப்பதன்பொருட்டு என்னிடம் வழங்கப்பட்ட சவாலை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

இற்றைவரைக்கும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் 2012 ஏப்ரல் முதல் 2015 மார்ச் மாதம் வரையான கணக்காய்வு நிதிக்கூற்றுக்கள் காணப்பட்டபோதும் அவை வருடாந்த ஆண்டறிக்கைகளாக தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படாமையும் 2015 ஏப்ரல் மாதம் முதல் வருடாந்த கணக்கறிக்கை தயாரிக்கப்படாமையும் நாம் எதிர்கொண்ட மற்றுமொரு சவாலாகும். 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்த இறுதிக் கணக்கறிக்கை மற்றும் வருடாந்த ஆண்டறிக்கை என்பன முறையாக தாயரிக்கப்பட வேண்டிய நிலையில் கடந்த கால தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மிகக் குறுகிய காலப்பகுதயில் 2012 முதல் 2015 வரையான காலப்பகுதிகளுக்கான ஆண்டறிக்கைகளை இவ்வாறு தயார்செய்து முன்வைப்பது என்னுடைய பதவிக் காலத்திற்குள் நான் ஏற்றுக்கொண்ட ஒரு மாபெரும் பொறுப்பாகக் காணப்படுகின்ற அதேவேளை, எம்மிடம் காணப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அறிக்கை தயாரித்து இவ்வாறு முன்வைப்பது தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் காணப்பட்ட சகல தங்குதடைகளையும் தாண்டி போட்டிமிக்க சந்தையில் மீண்டும் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதற்குத் தேவையான அனைத்து தீர்மானங்களையும் மேற்கொண்டு எந்நேரமும் என்னை தையரியமூட்டி தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கிய கௌரவ ஜனாதிபதி அவர்கள், கௌரவ பிரதமர் உட்பட அவர்களது முழு ஊழியர் குழாத்திற்கும் அவ்வாறே திறைசேரியின் முழு ஊழியர் குழாத்திற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவ்வாறே எமது நிறுவனத்தின் செயற்பாடுகளை முறையாக மேற்பார்வைசெய்து எமக்குத் தேவையான அனைத்து அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி எம்முடன் நம்பிக்கையுடன் செயற்படுகின்ற எமது அமைச்சின் செயலாளர் உட்பட அனைத்து ஊழியர் குழாத்திற்கும் அவ்வாறே, எதிர்காலத்தில் தேசிய கடதாசித் தேவையினை பூர்த்திசெய்வதற்கு எப்போதும் எமது கூட்டுத்தாபனத்திற்கு சக்தியாக இருக்கின்ற எமது கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவினரை இச்சந்தர்ப்பத்தில் அன்போடு நினைவுகூர்கின்ற அதேவேளை, இக்கூட்டுத்தாபனத்தின் முன்னோடிகள் என்ற அடிப்படையில் இப்போது என்னுடன் கைகோர்த்து, தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால வெற்றியின்பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற இக்கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர் குழாத்தினரையும் நான் இச்சந்தர்ப்பத்தில் பெருமகிழ்ச்சியோடு நினைவுகூர்கின்றேன்.

விமல் ரூபசிங்க
தலைவர்
தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

2022

தலைவர் உட்பட பணிப்பாளர் குழாத்தினர



கே.ஏ.விமல் ரூபசிங்க அவர்கள்
தலைவர்



திருமதி. ருவினி சேனாரத்ன
பணிப்பாளர்



திரு. ஜே.பீ.ஹீன்கெந்த
பணிப்பாளர்



திரு. தினுந்து முனிதாச
பணிப்பாளர்



திரு. எஸ்.எஸ்.கெடவெலகெதர
பணிப்பாளர்



திருமதி. எம்.டீ ஹிமாலி சீ விஜேதுங்க
பணிப்பாளர்



திரு. ஜீ.பீ.எஸ்.எஸ். வீரசூரிய
பணிப்பாளர்

கூட்டிணைக்கப்பட்ட இலக்கு மற்றும் நோக்கக் கூற்று

எமது இலக்கு

இலங்கையின் கடதாசிக் கைத்தொழிலின் விருத்திக்கு பங்களிப்பு செய்வதன் பொருட்டு, தற்போது இலங்கையில் உற்பத்திசெய்யப்படாத அச்சுத் தாள்கள், நிழற்பிரதி தாள்கள், கணினி காகிதாதிகள் போன்ற கடதாசி மற்றும் அட்டைகள் (Board) உற்பத்தி தொடர்பில் இலங்கையில் சந்தைப்படுத்தலில் முன்னோடிகளாகத் திகழ்தல்

எமது நோக்கக் கூற்று

அதிக இலாபம் தரக்கூடிய சூழலுக்கு பங்கம் ஏற்படாத வகையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடியவர்களை அடிப்படையாகக் கொண்டு தொழிநுட்பம், மனித வளம் மற்றும் சிறப்பான முகாமைத்துவம் என்பன காணப்படுகின்ற அனைத்து வகையான கடதாசிகள் மற்றும் அட்டைகளை (board) உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றில் முற்றிலும் புத்தாக்கத்தையும் பல்வகைமையையும் ஏற்படுத்திய கடதாசிக் கூட்டுத்தாபனமாகத் திகழ்தல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம்

உள்ளடக்கம்

2013 / 2014 நிதி வருடம்

1. கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்
2. பணிப்பாளர்களின் அறிக்கை
3. கணக்காய்வாளர்களின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள்

வரையறுக்கப்பட்ட இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம்

கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்: 2013 / 2014

பொறுப்பதிகாரி: - திரு. மங்கள சீ செனரத்

பணிப்பாளர்: - திருமதி ஆர்.எம். தமித்தா குமாரி ரத்நாயக்க

பணிப்பாளர்: - திரு. பீ.பீ(B). விக்கிரம முனிகே

கூட்டுத்தாபன செயலாளர்கள்

எம். ஆனந்த திஸ்ஸ ஜயசேன பிரனாந்து

இல 519/2A, எல்விட்டிகல மாவத்தை

பொழும்பு 05

பதிவுசெய்யப்பட்ட காரியாலயம்

இல.93 ஜாவத்தை வீதி

கொழும்பு – 05

கணக்கதிகாரிகள்

தயானந்த சமரவிக்ரம மற்றும் கூட்டுத்தாபனம்

பட்டயக் கணக்காளர்கள்

இல 20/26

புகையிரத ஒழுங்கை (ஜனதா பொல பார)

நுகேகொடை, இலங்கை

வங்கிதாரர்கள்

மக்கள் வங்கி

இலங்கை வங்கி

தேசிய அபிவிருத்தி வங்கி

பணிப்பாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் குழாத்தின் மூலம் 2014.03.31 இல் முடிவடையும் வருடத்துக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கூடிய ஆண்டறிக்கையினை இவ்வாறு முன்வைக்கின்றனர்.

1. பிரதானமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தில் பிரதானமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடாவது, கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளை (Paper boards) வாழைச்சேனை தொழிற்சாலையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதாகும்.

2. மூலதனப் பங்கு

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் திறைசேரியின் செயலாளரின் 100% பங்கு உரிமைகளைக் கொண்ட அரசுக்குச் சொந்தமான ஒரு வியாபார ஒன்றியமாகும். இங்கு மூலதனப் பங்கு 323 மில்லியனாகும். (அவ்வாறாயின் மூலதனப் பங்கு 10% அடிப்படையில் பங்கு 32,300,000 இற்கு சமனாகும்.)

3. மொத்த விற்பனை

2014.03.31 ஆம் திகதியுடன் முடிவடையும் கணக்கு வருடத்தின் நிறுவனத்தின் தேறிய மொத்த விற்பனை ரூபா 77,132 மில்லியனாகும்.

4. கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செலவுகள்

கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் வாழைச்சேனை தொழிற்சாலையின் உற்பத்தி செலவுகள் ரூபா 258,628 மில்லியன் ஆகும்.

5. **மூலனச் செலவுகள்**

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் மறுகட்டமைப்புக்கு உட்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் அதன் மூலதனச் செலவுகள் மிகக் குறைந்த அளவில் மட்டுப்படுத்தப்பட்டது.

6. கூட்டுத்தாபனம் தொடர்பிலான ஒப்பந்தங்களை அணுகுவதற்கு பணிப்பாளர்கள் காட்டிய விருப்பு

2014.03.31 உடன் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியாது.

7. கணக்காய்வாளர்கள்

கூட்டுத்தாபனத்தின் 2014.03.31 உடன் முடிவடைந்த வருடத்தில் நிதிக் கூற்றுக்கள் கணக்காளர்களான தயானந்த சமரவிக்ரம என்னும் கூட்டுத்தாபனத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தானம்

2013 / 2014 முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள்

தயாநந்த சமரவிக்ரம & கம்பனி
பட்டயக் கணக்காளர்

பங்குதாரர்கள்
H.G. தயாநந்த FCA
J. ராஜசூரிய FCA, BA
K.G. சந்தன குமார ACA

இல. 20/26, ஸ்டேசன் வீதி, (ஜனத்த பொல வீதி)
நுகேகொடை, ஸ்ரீ லங்கா.
தொ.பேசி : 2854614, 2809650, 2822940
பக்ஸ் : 2820112
மின்னஞ்சல் : dsandco@sltnet.lk

சுயாதீனக் கணக்காய்வாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தானத்தின் உறுப்பினர்களுக்கானது

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அறிக்கை

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய 2014 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான நிதி நிலைமைக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், முடிவடையும் வருடத்துக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள், பிரத்தியே கணக்கியல் கொள்கைகள் தொடர்பான சுருக்கம் மற்றும் விரிவான குறிப்புகள் என்பன தொடர்பாக நாம் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளோம்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ப இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அவற்றை முன்னளிக்கை செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இத்தகைய பொறுப்புகளின் கீழ் வடிவவமைத்தல், நடைமுறைப்படுத்தல், மூலப்பொருள் முரண் கூற்றுக்களிலிருந்து அதாவது அக்கூற்றுக்கள் தவறானவையாகவோ அல்லது பிழையானதாகவோ இருந்தாலும் சுயாதீனமான கணக்குக் கூற்றுக்களைத் தயாரித்தல், அவற்றை முன்னளிப்புச் செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்வகித்தல் என்பன உள்ளடங்குகின்றன. தெரிவு செய்ப்பட்ட கணக்கியல் கொள்கைகளைப் பிரயோகித்து கணக்கியல் மதிப்பீடுகளைத் தயாரிப்பது சூழ்நிலைக்கேற்ற நியாயமான செயற்பாடாகும்.

கணக்காய்வின் செயற் பரப்பும் அபிப்பிராயங்களின் அடிப்படைகளும்

எமது கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவது எங்களது பொறுப்பாகும். எங்களுடைய கணக்காய்வு நடவடிக்கைகளை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்கின்றோம். அந்த நியமங்கள், நிதிக் கூற்றுக்கள் என்பன மூலப்பொருள் முரண்கூற்றிலிருந்து விடுபட்டதாயினும் நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதற்கு கணக்காய்வினைத் திட்டமிட்டு செயற்படத் தேவைப்படுத்துகின்றது.

கணக்காய்வென்பது பரீட்சித்தல், சோதனை அடிப்படை, நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொகைக்குரிய சான்றுகளை வெளிப்படுத்தல் என்பவற்றைக் கொண்டமைந்தது. அத்துடன் கணக்காய்வென்பது பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளை மதிப்பிடுதல் மற்றும் முகாமைத்துவத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மதிப்பீடுகள் அத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதிக் கூற்றுக்களை மதிப்பீடு செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

நாங்கள் கணக்காய்வு நோக்கத்துக்குத் தேவையான எல்லாத் தகவல்கள் மற்றும் விளக்கங்களை எங்களது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைகளுக்கும் எட்டியவகையில் திரட்டியுள்ளோம். எனவே எங்களது கணக்காய்வு அறிக்கையானது அபிப்பிராயங்களுக்குரிய நியாயமான அடிப்படைகளைக் கொண்டுள்ளதென நாங்கள் நம்புகிறோம்.

அடிப்படையிலே வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் இரண்டு ஆலைகளைக் கொண்டது. ஒன்று எம்பிலிப்பிட்டியவில் அமைந்துள்ளது. மற்றையது வாழைச்சேனையில் அமைந்துள்ளது. 2014 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் கீழே விபரிக்கப்பட்டவாறு கணக்கியல் நியமங்களோடு இணங்கவில்லை.

01. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் – LKAS 01 (நிதிக் கூற்றுக்களின் முன்னளிக்கை) தொடர்பான சட்டக அமைப்பு மீதான கணக்கியல் நியமங்களின் கீழ் தேவைப்படுகின்றவாறு எங்களது பரீட்சித்தலுக்கான அனுப்பிவைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரத்தியேக நிதிக் கூற்றுச் சமர்ப்பிப்புடன் இணங்காமையினால் எங்களுக்கு முன்னளிக்கை செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எங்களால் திருப்திப்பட முடியவில்லை. மேலும் 525 ஏக்கர் விஸ்தீரமான 5 தோட்டங்களின் பெறுமதியான ரூபா 11,188,275/= ஆனது தொடர்ந்து பல வருடங்களாக எம்பிலிப்பிட்டிய ஆலையின் (குறிப்பு 15) பயிரிச்செய்கை இருப்பாகக் காட்டப்பட்டுள்ளது.
02. வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தானத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட இரண்டு கடதாசி ஆலைகளுள் எம்பிலிப்பிட்டிய ஆலை 2011 நவம்பர் 15ஆம் திகதி வெளிநாட்டு வளங்கள் மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட Aus லங்கா கடதாசிக் கம்பனிக்கு விலை மனுக்கோரலின் மூலம் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்வதற்கான சட்டங்கள் மற்றும் நிபந்தனைகள் என்பன விரிவாகக் காட்டப்படாத அதேவேளை, ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் அறிக்கைகள் எம்பிலிப்பிட்டிய ஆலை விற்பனை செய்யப்பட்ட விடயத்தில் முறையாகப் பின்பற்றப்படவில்லை. தற்போது FCID (விசாரணை இல. FCID/145/15) மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு (விசாரணை இல. PCI/859/2015) என்பவற்றில் குறித்த விற்பனை தொடர்பாக விசாரணை நடைபெற்ற வண்ணம் உள்ளன. இந்த நிலைமையானது இது பற்றி எங்களைக் கருத்துத் தெரிவிப்பதிலிருந்து விலக்குகின்றது.
03. சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் சில நிலையான சொத்துக்கள் என்பன தொடர்பான குறித்த பதிவுகள் முறையாகப் பேணப்படாமையினால் சில நிலையான சொத்துக்கள் எங்களால் கண்டுபிடிக்கப்படமுடியாதுள்ளது. ஒதுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு கம்பனி சரியான முறைகளைப் பின்பற்ற வில்லை. மேலும் சில நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்வடைந்திருந்தும் அவ்வாறாகப் பாவனையிலுள்ள பொறிகள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பில் மீள் மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளாதிருந்ததை எங்களால் இனங்காணக் கூடியதாக இருந்தது. சொத்துக்கள், பொறிகள், இயந்திரங்கள் ஏனைய சொத்துக்கள் தொடர்பான கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதிப் பகுதியிலும் எஞ்சிய பெறுமதி, பயன்படு வாழ்க்கைக் காலம் மற்றும் தேய்மானம் என்பன பொருத்தமான முறையில் மறுசீரமைப்பு மற்றும் சரிப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும் (LKAS 16).

04. பின்வரும் நான்கு வழக்குகளும் சட்ட அதிகார சபைகளுக்கு முன்பதாக வாழைச்சேனை ஆலையின் கழிவுப் பொருட்களை அகற்றியமை தொடர்பில் விசாரணை முடிவடையாத நிலையில் காணப்படுகின்றன.

சட்ட அதிகாரம்	**வழக்கு இல./ விசாரணை கோவை இல.**
1. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு	B/C 3067/2012 B / 15
2. மோசடி தொடர்பான பணியகம்	IR 606/03/15
3. குற்ற விசாரணைத் திணைக்களம்	B 201 – 2016
4. நீதவான் நீதி மன்றம் - வாழைச்சேனை	B 661/12

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வழக்குகளுக்கும் மேலதிகமாக ஒதுக்கப்பட்ட பொருட்களின் விடயம் தொடர்பில் கவனிக்கும்போது, வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பில் முறையான ஒழுங்கு விதிகளைப் பின்பற்றவில்லை. இதனடிப்படையில் தீர்வையான காசோலை கிடைக்கப் பெறுவதற்கு முன்னராகவே கழிவுப்பொருட்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடலாம்.

05. தொழில் பிணக்குகள் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் பல இக்கம்பனியின் பால் இருப்பதை நாம் அவதானித்தோம். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றக்கான நியதிச்சட்ட அடிப்படையிலான தேவைப்பாடுகள் 2014. 03. 31 வரையான தினத்திற்கு செலுத்தப்படவில்லை.

எனினும் தற்காலிக ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் இத்தகைய கொடுப்பனவுகள் மாதிரிகள் பரீட்சித்ததற்கு அமைவாகச் செலுத்தப்பட்டிருக்கின்றன.

நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் வழக்கு விசாரணைகள் போன்ற எதிர்பாராத பொறுப்புகளுக்கு ஏற்பாடுகளும் வெளிப்படுத்தல்களும் தேவைப்படுகின்றன. எனினும் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் LKAS 37 உடன் உடன்படவில்லை.

06. கம்பனியுடனான ஒப்பந்தத்தில் பணிப்பாளர்களின் அக்கறை

2014 மார்ச் 31 உடன் முடிவடையும் நிதி வருடத்தில் கம்பனியுடனான ஒப்பந்தத்தில் பணிப்பாளர்களின் அக்கறை தொடர்பில் எங்களுக்கு எந்தவிதமான தகவல்களும் வழங்கப்படவில்லை என்பதுடன் மேலும் கம்பனியை முகாமை செய்வதற்காக 2012 ஏப்ரல் 02 ஆம் திகதி முதல் செயற்படும்படியாக பணிப்பாளர் சபையானது தகுதி வாய்ந்த அதிகார சபையினால் பிரதியீடு செய்யப்பட்டிருந்ததையும் எங்களால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அபிப்பிராயம்

எங்களுடைய அபிப்பிராயம் என்னவெனில், முன்னைய பந்திகளிலே கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்களின் விளைவு காரணமாக நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் விரிவான வருமானக் கூற்றுக்கள் கூற்றுக்கள், ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சற் கூற்றுக்கள், மற்றும்

கணக்கியல் கொள்கைகள், மற்றும் ஏனைய கம்பனியின் குறிப்புகள் என்பன நிதி நிலைமைக் கூற்றுக்கள் தொடர்பாகவும் 2014 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான அதன் செயற்பாடுகள் குறித்தும் நியாயமான உண்மையான வெளிப்பாட்டைக் காட்டவில்லை.

விடயம் தொடர்பான அழுத்தம்

இதற்கு மேலதிகமாகக் கம்பனியின் தொடர் கண்காணிப்பு அக்கறை (going concern concept) தொடர்பான பிரத்தியேக சந்தேகங்களை விளக்குகின்ற நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 30 தொடர்பில் உங்களுடைய அவதானத்தை இட்டுச் செல்கின்றோம். இதிலே ஊழியர்களினால் கம்பனியில் ஊழியர்களின் கடமைகள் தொடர்பில் கோவை செய்யப்பட்ட பல வழக்குகள் காணப்படுகின்றன. (குறிப்பு 31). கம்பனியின் வெளியீடுகள் 2014. 03. 31 ஆம் திகதி வரை நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளது. இத்தகைய கடைமைகளைச் சரி செய்வதற்கான எந்தவொரு ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களிலே வழங்கப்படவில்லை.

ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குகளின் தேவைப்பாடுகளின் மீதான அறிக்கை

எங்களது அபிப்பிராயப்படி, 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினை வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனமானது மீறியமைக்கான எந்தவொரு சந்தர்ப்பத்தினையும் கண்டுபிடிக்க முடியாமலுள்ளது.

தயானந்த சமரவிக்கிரம & கோ,
பட்டயக் கணக்காளர்,
நுகேகொட,
02.02.2017

தயாநந்த சமரவிக்ரம & கம்பனி
பட்டயக் கணக்காளர்

பங்குதாரர்கள்
H.G. தயாநந்த FCA
J. ராஜசூரிய FCA, BA
K.G. சந்தன குமார ACA

இல. 20/26, ஸ்டேசன் வீதி, (ஜனத்த பொல வீதி)
நுகேகொடை, ஸ்ரீ லங்கா.
தொ.பேசி : 2854614, 2809650, 2822940
பக்ஸ் : 2820112
மின்னஞ்சல் : dsandco@sltnet.lk

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
2014 மார்ச் 31 உடன் முடிவடையும் வருடத்துக்கான
விரிவான வருமானக் கூற்றுக்கள்

	குறிப்பு	2013 / 2014 ரூபா '000'	2012/2013 ரூபா '000'
வருமானம்	4	77,132	88,194
விற்பனைப் பெறுமதி	5	(258,628)	(163,233)
மொத்த இலாபம் / நட்டம்		**(181,497)**	**(75,039)**
ஏனைய செயற்பாட்டு வருமானங்கள்	6	20,665	59,306
		(160,832)	**(15,733)**
நிர்வாகச் செலவீனங்கள்	7	(30,529)	(42,774)
விற்பனை விநியோகச் செலவீனங்கள்	8	(7,256)	(5,082)
ஏனைய செயற்பாட்டுச் செலவீனங்கள்	9	(2,574)	(2,574)
செயற்பாட்டிலிருந்தான இலாபம் / நட்டம்		(201,191)	(66,164)
நிதிச் செலவீனங்கள்	10	(7,378)	(7,550)
வரி விதிப்புக்கு முன்னரான இலாபம் / நட்டம்		**(208,569)**	**(73,714)**
வரி விதிப்பு		-	-
வரிவிதிப்பின் பின்னரான இலாபம் / நட்டம்			(73,714)
இடை நிறுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவீனங்கள்			
ஊ.சே.நி / ஊ.ந.நி & பணிக்கொடை	11	(95)	(1,329)
ஏனையவை	12	(562)	(582)
		(658)	(1911)
வரி விதிப்பு & நிறுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவீனங்களின் பின்னரான இலாபம் / நட்டம்		(209,227)	(75,625)

தயாநந்த சமரவிக்ரம & கம்பனி
பட்டயக் கணக்காளர்

பங்குதாரர்கள்
H.G. தயாநந்த FCA
J. ராஜசூரிய FCA, BA
K.G. சந்தன குமார ACA

இல. 20/26, ஸ்டேசன் வீதி, (ஜனத்த பொல வீதி)
நுகேகொடை, ஸ்ரீ லங்கா.
தொ.பேசி : 2854614, 2809650, 2822940
பக்ஸ் : 2820112
மின்னஞ்சல் : dsandco@sltnet.lk

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
31 மார்ச் 2014 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

		31.03.2014 ரூபா 000	31.03.2013 ரூபா 000
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
பொறிகள் மற்றும் உபகரணங்கள்	13	56,000	55,054
நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள்	13A	34,224	33,017
நீண்டகால முதலீடுகள்	14	56,484	53,206
		147,308	141,277
நடைமுறைச் சொத்து			
மூலப்பொருள் & நுகர்வுப்பொருள் இருப்பு	15	129,491	123,175
நடைமுறை வேலை இருப்பு	16	975	2,488
முடிவுப் பொருட்களின் இருப்பு	17	3,328	35,707
வியாபாரக் கடன்பட்டோர்	18	35,187	2,382
வைப்புக்கள் & முற்கொடுப்பனவுகள்	19	922	2,382
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	20	250,290	253,124
வங்கி, கையிலுள்ள காசு	21	2,204	1,496
மொத்த நடைமுறைச் சொத்து		422,398	444,734
சொத்துக்கள்		569,706	586,011
ஒப்புரவு & பொறுப்புக்கள்			
மூலதனம் & ஒதுக்கங்கள்			
தீர்மானிக்கப்பட்ட மூலதனம்	22	323,000	323,000
வெளிநாட்டு மாணியங்கள்	23	41,777	41,777
மூலதன ஒதுக்கம்	24	45,088	45,088
வருமான ஒதுக்கங்கள்	24A	(1,377,261)	(1,177,288)
மொத்த ஒப்புரவு		(967,396)	(767,423)
நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்			
குத்தகைக் கடன்கொடுநர்	25	4,599	5,527
நீண்டகாலக் கடன்கள்	26	160,005	160,005
		164,604	165,532
நடைமுறைப் பொறுப்புக்கள்			
குத்தகைக் கடன்கொடுநர்	25	1,395	863
அரசுக்கான சென்மதிகள்	27	36,859	27,795
வியாபாரம்,ஏனைய கடன்கொடுநர் & பெறுகைகள்	28	1,271,847	1,103,177
வங்கி மேலதிகப் பற்று	29	62,397	56,068
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**1,372,498**	**1,187,903**
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		**569,706**	**586,011**

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றது என்னதை நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

.....
பிரதான கணக்காளர்

இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்வைத்தலுக்கான பொறுப்பானது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். பணிப்பாளர்கள் சார்பில் பின்வருவோரால் கையொப்பமிடப்படுகின்றது.

....
தகுதிவாய்ந்த அதிகாரி பொது முகாமையாளர்

தயாநந்த சமரவிக்ரம & கம்பனி
பட்டயக் கணக்காளர்

பங்குதாரர்கள்
H.G. தயாநந்த FCA
J. ராஜசூரிய FCA, BA
K.G. சந்தன குமார ACA

இல. 20/26, ஸ்டேசன் வீதி, (ஜனத்த பொல வீதி)
நுகேகொடை, ஸ்ரீ லங்கா.
தொ.பேசி : 2854614, 2809650, 2822940
பக்ஸ் : 2820112
மின்னஞ்சல் : dsandco@sltnet.lk

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள்

விபரணம்	ஆரம்ப மூலதனம்	வெளிநாட்டு மானியங்கள்	மூலதன ஒதுக்கீடு	வருமான ஒதுக்கீடு	ரூபா 000 மொத்தம்
2011. 04. 01 இற்கு மீதி	323,000	41,777	45,088	(999,216)	(589,351)
இலாப சரிப்படுத்தல்கள்	-	-	-	(102,446)	(102,446)
வருடத்துக்கான இலாபம் நட்டம்	-	-		(75,625)	(75,625))
31. 03. 2013 இற்கு மீதி	323,000	41,777.00	45,088	(1,177,288)	(767,422)
01. 04. 2013 இற்கு மீதி	**323,000**	**41,777.00**	**45,088**	**(1,177,288)**	**(767,422)**
இலாபத்தின் மீதான சரிப்படுத்தல்கள்	**-**	**-**	**-**	**(9,255)**	**(9,255)**
வருடத்துக்கான தேறிய இலாபம் / நட்டம்	**-**	**-**	**-**	**(209,227)**	**(209,227)**
31. 01. 2013 இற்கு மீதி	**323,000**	**41,777.00**	**45,088**	**(1,377,261)**	**(967,394)**

தயாநந்த சமரவிக்ரம & கம்பனி
பட்டயக் கணக்காளர்

பங்குதாரர்கள்
H.G. தயாநந்த FCA
J. ராஜசூரிய FCA, BA
K.G. சந்தன குமார ACA

இல. 20/26, ஸ்டேசன் வீதி, (ஜனத்த பொல வீதி)
நுகேகொடை, ஸ்ரீ லங்கா.
தொ.பேசி : 2854614, 2809650, 2822940
பக்ஸ் : 2820112
மின்னஞ்சல் : dsandco@sltnet.lk

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
31 மார்ச் 2013 உடன் முடிவடையும் வருடத்துக்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

	2013/2014 ரூபா '000'	2012/2013 ரூபா '000'
தொழிற்படு நிகழ்வுகளுக்கான காசுப் பாய்ச்சல்		
வரிக்கு முந்திய (நிகர இலாபம் / நட்டம்)	(209,227)	(75,625)
ஆரம்ப மீதி வேறுபாட்டுக்கான முன்னைய வருட சரிப்படுத்தல்கள்	9,255	(102,447)
சரிப்படுத்தல்கள்		
தேய்மானம்	6,007	4,208
திரண்ட தேய்மானத்துக்கான சரிப்படுத்தல்கள் - எம்பிலிப்பட்டிய	(6,949)	-
கழிவுப் பொருட்களுக்கான பெறுகை அல்லது அகற்றல்	-	(17,059)
வட்டி வருமானம்	(7,203)	(5,295)
குத்தகை வட்டிச் செலவுகள்	1,469	483
மூலதன வேறுபாடுகள் செயற்படுவதற்கு முன்னரான தொழிற்படு இலாபம்	(206,648)	(195,735)
பொருள் விபரப் பட்டியல் (அதிகரிப்பு / குறை)	27,576	(25,649)
வருமதிகள் (அதிகரிப்பு / குறை)	(4,532)	103,383
சென்மதிகள் (அதிகரிப்பு / குறை)	168,670	87,398
செயற்பாடுகளிலிருந்து பண உற்பத்தி	**(14,934)**	**(30,603)**
நம்பிக்கை கடன்கள் மீதான வட்டி	5,714	(6,855)
தொழிற்படு செயற்பாடுகள் மீதான நிகர காசுப் பாய்ச்சல்	(9,221)	(23,748)
முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்		
சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் மீதான கையகப்படுத்தல்	(603)	(4,693)
கழிவுப் பொருட்கள் அல்லது அகற்றிய சொத்துக்கள் மூலம் கிடைக்கப்பெற்றவை	-	(17,449)
மூலதன வேலை முன்னேற்றம்	(1,207)	(6,079)
நிலையான வைப்புக்களுக்கான வட்டி	(3,279)	362
கிடைக்கப்பெற்ற வட்டி	7,203	5,295
முதலீட்டு நடவடிக்கைகளுக்கான நிகர காசுப் பாய்ச்சல்	2,115	12,334
நிதி நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்		
அரசாங்கத்திடமிருந்து பெறுகைகள் / கொடுப்பனவுகள்	9,064	3210
நீண்ட காலக் கடன் (பெறுகைகள் / கொடுப்பனவுகள்)	-	350
செலுத்தப்பட்ட குத்தகை வட்டி	(1,469)	-
நம்பிக்கை கடன் மீதான வட்டி	(5,714)	(6,855)
செலுத்தப்பட்ட வாடகைக் கட்டணம்	(396)	(731)
நிதி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட நிகர காசுப் பாய்ச்சல்	1,486	(4,026)

பணம் அல்லது பணத்திற்கு ஈடானவை மீதான நிகர அதிகரிப்பு	(5,620)	(15,441)
குறிப்பு A இன் ஆரம்பத்தில் பணம் அல்லது பணத்திற்கு நிகரானவை	(54,572)	(39,132)
குறிப்பு B இன் இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை	(60,193)	(54,573)
குறிப்பு A		
வங்கி மீதி	20	1,211
சில்லறைத் தொகை	1,476	95
வங்கி மேலதிகப் பற்று	(56,068)	40,438
	(54,572)	(39,132)
குறிப்பு B		
வங்கி மீதி	2005	20
சில்லறைத் தொகை	199	1,476
வங்கி மேலதிகப் பற்று	(62,397)	(56,068)
	(60,193)	(54,572)

தயாநந்த சமரவிக்ரம & கம்பனி
பட்டயக் கணக்காளர்

பங்குதாரர்கள்
H.G. தயாநந்த FCA
J. ராஜசூரிய FCA, BA
K.G. சந்தன குமார ACA

இல. 20/26, ஸ்டேசன் வீதி, (ஜனத்த பொல வீதி)
நுகேகொடை, ஸ்ரீ லங்கா.
தொ.பேசி : 2854614, 2809650, 2822940
பக்ஸ் : 2820112
மின்னஞ்சல் : dsandco@sltnet.lk

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

31 மார்ச் 2014 இல் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்

1. கூட்டுத்தாபனத் தகவல்கள்

1.1 பொது

இக் கம்பனியானது முற்றாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புடமைக் கம்பனியாவதுடன் 01 யூலை 1992 இலிருந்து இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டமைந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட கம்பனியின் காரியாலயம் ஆனது இல. 93, யாவத்த, கொழும்பு 05 இல் அமைந்துள்ளது.

அதனது வியாபார முதன்மை இடமானது வாழைச்சேனை ஆலையில் அமைந்துள்ளதுடன் தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்துள்ளது.

1.2 முதன்மைச் செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளைச் செய்வதே கம்பனியின் முதன்மைச் செயற்பாடாகும்.

2. பொருளுண்மையுள்ள கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

2.1 பொது கணக்கியல் கொள்கைகள்

2.1.1 தயாரிப்பின் அடிப்படை

வரலாற்றுப் பெறுமதியின் அடிப்படையிலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் அடிப்படையிலும் இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கையர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 08 ஆகஸ்ட் 2016 ஆம் ஆண்டு இந்த நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2.1.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

இக் கணக்கீட்டுக் கொள்கைகளானவை கம்பனியினால் நிலையானதாகவும் கடந்த வருடங்களுக்கு இசைவாகவும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. உற்பத்திக் கணக்கு தவிர்ந்த ஏனையவற்றுக்கு நடைமுறை வருட சமர்ப்பித்லுக்கு அவசியமான விதத்தில் கடந்த வருட எண்களும் அவத்தைகளும் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

2.1.3 இடைநிறுத்தப்பட்ட செயற்பாடுகள்

எம்பிலிப்பிட்டியவில் கம்பனியானது ஐந்தொகைத் திகதியில் தனது செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளது.

2.2 சொத்துக்களும் அவற்றின் பெறுமதியின் அடிப்படைகளும்

2.2.1 சொத்து, பொறிகள் & உபகரணங்கள்

a) பெறுமதி

சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன அவற்றின் பெறுமதி அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

b) தேய்மானம்

சுயாதீனமாக இருக்கின்ற நிலம் தவிர்ந்த மூலச் சொத்து, பொறிகள் & உபகரணங்கள் என்பவற்றிற்கான தேய்மான ஏற்பாட்டுப் பெறுமதியானது அத்தகைய சொத்துக்களின் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள வாழ்க்கைக் காலத்துக்கான அத்தகைய தொகையைத் தள்ளுபடி செய்வதற்கான நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டுள்ளது.

வருடத்துக்கான முதன்மை வட்டி வீதமானது பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது

கட்டடம்	2.5%
தளபாடம், பொருத்துதல்கள் & உபகரணங்கள்	10%
மோட்டார் வாகனங்கள்	25%
செய்முறை உபகரணங்கள்	6.25%

சொத்துக்களுக்குரிய தேய்மானமானது அவை பயன்படுத்தத் தொடங்கியவுடன் ஆரம்பமாகின்றது.

பொறுப்புரிமை அளிக்கப்படும் அல்லது கையகப்படுத்தும் ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்படவில்லை.

c) மறுசீரமைப்புப் பெறுமதி

சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதான திருத்தங்கள் அல்லது பராமரிப்புக்கு ஏற்பட்ட செலவீனங்களானது ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திறன் நியமங்களிலிருந்தான எதிர்பார்த்த எதிர்காலப் பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கான சொத்துக்கள், பொறிகள் மற்றம் உபகரணங்களை மறுசீரமைப்பு அல்லது பராமரிப்புச் செய்வதற்கு ஏற்பட்ட செலவீனம் என அங்கீகரிக்கப்படுகின்றது.

2.3 பொறுப்புடமைகள் மற்றும் ஏற்பாடுகள்

2.3.1 பொறுப்புடமைகள்

ஐந்தொகையில் உள்ள பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்ட நடைமுறைப் பொறுப்புக்களானது ஐந்தொகைக்கான திகதியிலிருந்து ஒரு வருட காலப் பகுதியில் வீழ்ச்சி அடையுமென எதிர்பார்க்கப்பட்டது. நீண்டகால பொறுப்புடமைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட உருப்படிகள் ஐந்தொகைக்கான திகதியிலிருந்து ஒரு வருட காலப் பகுதியின் பின்னர் வீழ்ச்சி அடையுமென எதிர்பார்க்கப்பட்டது.

விற்பனை மற்றும் ஏனைய சென்மதிகள்

விற்பனைக் கடன்கொடுத்தோர் மற்றும் சென்மதிகள் அவர்களது முகப் பெறுமதியின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2.3.1.2. ஓய்வூதிய நன்மைக் கடமைகள்

a) வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டம் - பணிக் கொடை

தொழில் பெறுநர் அதற்குரிய தகுதியைக் கொண்டிருந்த போதும் தொழில் பெறுநருக்கான ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப் பட்டிருக்கவில்லை. எனவே, இந்த நிதியாண்டு காலப் பகுதியில் முழுப் பணிக்கொடை ஏற்பாடுகள் சீர் செய்யப்படுவதுடன் மேலும் குறிப்பிடத்தக்க ஓய்வு பெற்ற தொழில் பெறுநர்களால் அவர்களது ஓய்வூதிய உரிமைக் கோரிக்கையினை சட்ட ரீதியிலான முறைமை மூலம் கோரியிருப்பதுடன் அவற்றுக்கான வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்தும் கேட்பிலேயே உள்ளன.

b) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊ.சே.நி & ஊ.ந.நி

தொழில் பெறுநர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புச் செய்வதற்கு அதனுடன் தொடர்புடைய சட்டம் மற்றும் ஒழுங்குகளுக்கு ஏற்ப உரித்துடையவர்கள். கம்பனியானது தொழில் பெறுநரின் மொத்த ஊழியத்தின் 12%, மற்றும் 3% முறையே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

